**சாவகச்சேரி நகர சபை**

---------------------------------

**யாழ்ப்பாணம் மாவட்டம்**

---------------------------------

## 1 நிதிக்கூற்றுக்கள்

## 1.1 நிதிக்கூற்றுக்களினை சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 16 மார்ச் 2018 இல் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 28 செப்தெம்பர் 2018 இல் தவிசாளருக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சாவகச்சேரி நகர சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பதற்குப் பின்பற்றப்பட்டிருந்த கணக்கீட்டு கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

கடை வாடகை முற்பணம் ரூபா 92,925 கடை வாடகை நிலுவைக் கணக்கிற்கு எதிரீடு செய்யப்பட்டமையால் வாடகை நிலுவை மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் ரூபா 92,925 ஆல் குறைத்துக் காட்டப்பட்டுள்ளது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**பெறவேண்டிய கணக்குகள்**

இறந்த மற்றும் பதவி வறிதாக்கப்பட்ட ஐந்து அலுவலர்களினது பதவியினர் கடன் நிலுவைகளின் கூட்டுமொத்தம் ரூபா 96,668 அறவீடு செய்யப்பட்டிருக்க சபையினால் கடந்த 6 வருடங்களாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான ஆவணச்சான்றின்மை**

---------------------------------------------------

**கணக்காய்விற்கு தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை**

----------------------------------------------------------

ரூபா 6,072,025 கூட்டுமொத்தமான ஐந்து கணக்கு விடயங்கள் பௌதீக செவ்வை பார்த்தலுக்கு கிடைத்ததிருக்கவில்லையாதலால் அவற்றினை கணக்காய்வில் திருப்திகரமாக சரிபார்த்து சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

**1.3.5 இணங்காமைகள்**

--------------------

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்**

---------------------------------------------------------------------------------------------------

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| சட்டங்கள்,விதிகள்,பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) நகர சபைகள் கட்டளைச் சட்டம் | |
| (i) பாகம் VI இன் பிரிவு 157 இன் 6(எ) ஆம் இலக்கம். | வருமானப் பரிசோதகரினால் 55 அனுமதியற்ற விளம்பரங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ii) பாகம் VI இன் பிரிவு 157 இன் 9 ஆம் இலக்கம். | கழிவுநீர், மலக்கழிவு கொண்ட இடங்களை சுத்தம் செய்தல், மூடுதல் போன்ற பொதுமக்களிற்கான உடனலமும் இன்ப வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கத்தின் நிதி ஒழுங்கு விதிகள்<br>நிதி ஒழுங்கு விதி 880 | ஊழியர் பிணை வைப்பு அலுவலரொருவரிடம் பெறப்பட்டிருக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் அதற்கு நேரொப்பான முன்னய ஆண்டின் ரூபா 38,737,070 தொகையான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானத்துடன் ஒப்பிடுகையில் ரூபா 37,563,975 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவைகள் |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரிகள் | 7,204,000 | - | 7,125,455 | 11,075,392 | 6,551,200 | - | 7,490,826 | 10,217,661 |
| (ii) | வாடகைகள் | 23,991,200 | - | 26,409,694 | 870,290 | 25,925,200 | - | 23,903,332 | 1,153,178 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 783,000 | - | 643,160 | 19,550 | 768,000 | - | 804,680 | 74,400 |
| (iv) | ஏனைய வருமானம் | 17,762,400 | - | 29,906,367 | 3,889,975 | 15,470,500 | - | 25,457,582 | 32,303,012 |
| | | **49,740,600** | - | **64,084,676** | **15,855,207** | **48,714,900** | - | **57,656,420** | **43,748,251** |

#### 2.2.2 வீதவரிகள்

வீதவரி நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 9,447,715 அறவிடப்பட்டிருக்க சபையினால் கடந்த 01 தொடக்கம் 17 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 2.2.3 வாடகைகள்

வாடகை நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 486,229 அறவிடப்பட்டிருக்க சபையினால் கடந்த 01 தொடக்கம் 12 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

#### 2.2.4 அனுமதிப்பத்திர கட்டணம்

அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் நிலுவைகள் கூட்டுமொத்தம் ரூபா 5,300 அறவிடப்பட்டிருக்க சபையினால் கடந்த 02 தொடக்கம் 17 ஆண்டுகளாக ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை

### 2.2.5 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக்கட்டணங்கள்

2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வடக்கு மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்து ரூபா 4,307,233 தொகையான நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் ரூபா 20,190,277 தொகையான முத்திரைக் கட்டணங்கள் தொடர்ந்தும் பெறப்பட வேண்டியிருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) கைவிடப்பட்டிருந்த செயற்பாடுகள்

மீளாய்வாண்டில் கூட்டுமொத்தம் ரூபா 573,531 மதிப்பீடுடைய இரு வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருக்காது முற்றாகக் கைவிடப்பட்டிருந்தன.

#### (ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

மக்களை வறுமையிலிருந்து விடுவித்தலை நோக்கமாகக் கொண்டு அதிமேதகு சனாதிபதி அவர்களின் முன்மொழிவொன்றின்படி 2017 ஆம் ஆண்டை வறுமையிலிருந்து விடுவிக்கும் ஆண்டாக பிரகடனப்படுத்தப்பட்டிருந்த போதிலும் சபையினால் ஒதுக்கப்பட்டிருந்த ரூபா 200,000 குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 3.2 மனித வளங்கள் முகாமைத்துவம்

சபையானது உரியவாறு மனித வளத்தைப் பெற்று ஈடுபடுத்தாமையினால் அத்தகைய 19 மனிதவளங்களினால் நிறைவேற்றப்பட வேண்டிய சேவைகள் தாமதமடைந்துள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

### 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

ஒப்பந்தக் காலம் முடிவடைந்த இருபத்தாறு கடைகள் தொடர்பாக கடந்த 01 தொடக்கம் 08 ஆண்டுகளாக மீள் ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டிருக்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.4.1 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத்தவறியமை

சபைக்குரித்தான பழுதடைந்துள்ள மூன்று வாகனங்களினை திருத்தம் செய்து பாவனைக்கு உகந்ததாக்குவதற்கு சபையினால் ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.4.2 கையளிக்கப்படாத சொத்துக்கள்

சபையினால் பயன்படுத்தப்பட்டு வந்த இரு வாகனங்கள் சபைக்குரித்தற்றனவாக காணப்பட்டன.

### 3.4.3 குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) சபைக்குரித்த இரு வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்படாத நிலையில் காணப்பட்டன. எவ்வாறாயினும் அவற்றினை பயன்படுத்துவதற்கேற்ற ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) கச்சாய் கடற்கரையோரத்தில் சிறுவர் பொழுதுபோக்கு பூங்கா அமைப்பதற்காக வடக்கு மாகாண காணி ஆணையாளரிடமிருந்து பெறப்பட்டிருந்த காணி கடந்த இரண்டு ஆண்டுகளாக குறித்த நோக்கத்திற்கு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

**பாதீட்டுக் கட்டுப்பாடு**

பாதீட்டு வருமானத்திற்கும் உண்மை வருமானத்திற்கும் இடையே ரூபா 78,545 தொடக்கம் ரூபா 10,923,997 அல்லது 1 சதவீதம் தொடக்கம் 21 சதவீதம் வரையான வேறுபாடுகளும் மதிப்பீட்டு செலவினம், உள்ளபடியான செலவினம் என்பவற்றுக்கிடையே ரூபா 52,277 தொடக்கம் ரூபா 10,707,269 அல்லது 05 சதவீதம் தொடக்கம் 18 சதவீதம் வரையான வேறுபாடுகளும் அவதானிக்கப்பட்டன.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் காலத்திற்கு காலம் சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் | குறைபாடுகள் |
| --- | --- |
| கணக்கீடு | காணி விற்பனை வரிப் பதிவேடு , கணனிப் பராமரிப்புப் பதிவேடு என்பன பராமரிக்கத் தவறியமை. |